# வள்ளல் கீதம்

பாமணிகள்



என். எஸ். சிதம்பரம்



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

# வள்ளல் கீதம்

பாமணிகள்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

ஆசிரியர்:

**இசைப்பாவலர் என். எஸ். சிதம்பரம்**

வெளியிட்டவர்:

திருச்சி ஏகிரிமங்கலம் திரு சா. பெரியசாமி

★

கிடைக்குமிடம்:

**வள்ளல் நிலையம்,**

ஏகிரிமங்கலம்,

சிராத்தோப்பு :: திருச்சிராப்பள்ளி.

பிப்ரவரி 1952. [விலை அணா 4.

## காணிக்கை

★

நாளும் இன்னிசையால் நாடெல்லாம் அண்ணல் இராமலிங்கத்தின் அருட்புகழைப் பக்தித் தேனொழுகப் பாடிப் பணியாற்றிவரும் நற்றமிழ்நாடு ஈன்ற அருந்தவ அம்மையார் நிறைதண சாந்த இசைப் பெருமாட்டியார் **திருமதி கே. பி. சுந்தராம்பாள்** அவர்களுக்கு இக்கீத நூலைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

**ஆசிரியன்**

## நன்றி

சமரச சன்மார்க்கப் பணியாற்றவேண்டுமென்னும் பெருநோக்குடன் 'வள்ளல் கீதம்' என்னும் இச் சிறு நூலை வெளியிட உவகையுடன் முன்வந்த, கலையுணர்வில் தன்னை மறக்கும் சத்தியப் பேரன்பர் எனது ஆப்த நண்பர் திருச்சி ஏகிரிமங்கலம் **உயர்திரு சா. பெரியசாமி அவர்களுக்கு** எனது உள்ளம் கனிந்த பெரும் நன்றி என்றும் உரித்தாகுக.

**ஆசிரியன்**

★

# இராமலிங்கப் பெருந்தகையார்!

உலகைச் சமரச சுத்த சன்மார்க்க நெறிதனில் நிலைநிறுத்தி, உய்விக்கவந்த தலைசிறந்த உத்தம ஞானிகளில் தனிப்பெருமை வாய்ந்தவர் அருட்சுடர் வள்ளலாகிய இராமலிங்கப் பெருந்தகையார். அகில உயிர்கள் யாவும் அருட்பெருஞ்சோதி — தனிப்பெருங்கருணைத் திருவினரான ஆண்டவரின் உருவமென்னும் பேருண்மையை, அனைவரும் உணர்ந்து, மரணமிலாப் பெருவாழ்வுற வேண்டுமென்று திருவுள்ளம்கொண்டு, அருட்பணியாற்றிய இராமலிங்க வள்ளலை அளித்த பெருமை அருமைமிக்க நம் தமிழ் நாட்டிற்கே உரியது. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய சிவகாருண்யச் செம்மலாகிய அவரது இரக்கச் சித்தத்தை என்னென்பது! வாதிலும், சூதிலும், தீதிலும் அவமே காலங்கழித்துக்கொண்டிருக்கும் வையகத்தாரைப் பார்த்து "வாதுபேசிய மனிதர்காள் வந்தொரு வார்த்தை கேண்மின்கள்" என்று அறைகூவி அழைக்கும் அவரது கருணையுள்ளம் உரைகடந்ததேயாகும். உள்ளமுருக, உணர்ச்சி பெருக, தமிழ்த்தீந்தேன் அமிழ்தமாய்ப் பொங்கிவழிய அருட்பாக்கள் புனைந்த அவரது ஒப்புயர்வற்ற கவித்திறம் நினைக்க நினைக்க நெஞ்சம் இனிக்கும்! அன்புணர்ச்சி ததும்பும் அவரதுஅருட்பாக்களைப் பாடிப் பிறவி பெற்ற பெரும்பயனை அடைவோம்!

**என். எஸ். சிதம்பரம்**

# பதிப்புரை

இராமலிங்க வள்ளலாரின் அருட்பாக்கள் என்ருல் எனக்குச் சிறு போழ்திலிருந்தே விருப்பம்! அன்புத்தேன் சொட்டும் அவரது பாடல்கள் உள்ளத்தைக் கனியவைக்கும் அருமை மிக்கவையன்ருே?

'வள்ளல் கீதம்' என்னும் இந்நூலை வெளியிட வாய்ப்பு கிடைத்தமைக்கு அருட்சோதிவடிவான இறைவனை வாழ்த்துகின்றேன். இனிய எளிய தமிழில் இராமலிங்க வள்ளலைப்பற்றியும், அவரது அருட்பாக்களின் பெருமையைக் குறித்தும் 'வள்ளல் கீதம்' என்ற இந்நூலை இயற்றியுள்ள இசைப்பாவலர் திரு என். எஸ். சிதம்பரம் அவர்கள் தமிழ் நாட்டுக்கு நன்கு அறிமுகமானவர். அவரது இன்சுவைக் கீதங்கள் வானெலியிலும், இசை அரங்குகளிலும் அடிக்கடி முழங்குகின்றன. "இசைக்கனிகள்", "பாடும் கீதம் கேட்குது", "தமிழிசைப் பாடல்கள்" ஆகியவை முன்வெளிவந்துள்ள அவரது கீதநூல்கள். தமிழிசையுலகில் நல்லவரவேற்பையும், தமிழ்நாட்டின் பிரபல பத்திரிகைகளின் பெரும் பாராட்டுதல்களையும் பெற்றவை அந்நூல்கள்.

'வள்ளல் கீதம்' என்ற இந்நூலை வாய்மையிற் சிறந்த தமிழ்நாட்டுப் பெருமக்கள் யாவரும் மனமுவந்து வரவேற்பார்கள் என்று பரிபூரணமாக நம்புகின்றேன்.

இந்நூலை வெளியிட இசைவுதந்த இசைப்பாவலர் திரு என். எஸ். சிதம்பரம் அவர்களுக்கும், எழிலுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ ஷண்முகா அச்சக உரிமையாளர்களுக்கும் எனது அன்புகலந்த நன்றி உரியதாகுக.

ஏகிரிமங்கலம்,
திருச்சிராப்பள்ளி.

சா. பெரியசாமி,
உரிமையாளர், வள்ளல்நிலையம்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
திருப்பரங்குன்றம்

உ
திருவருள்.

அருட்பெருஞ்சோதி! தனிப்பெருங்கருணை !!

# வள்ளலின் கீதம்!

இராகம்: நாடகப்ரியா தாளம்: ஆதி

## பல்லவி

வள்ளலின் கீதம் வாய்த்தநற் போதம்!
வடலூர் வளரும் இராமலிங்க மெய் —(வ)

## அநுபல்லவி

கள்ளமும் கபடமும் கருக்கிடும் மருந்தாம்!
கமழும் இன்பக் கனிதமிழ் விருந்தாம்! —(வ)

## சரணம்

ஒருமுறை படித்திடில் உள்ளம் உருகிடும்!
உணர்ந்து பார்த்திடில் கருணை பெருகிடும்!
திருமுறை எனவே தெளிந்தே உய்வோம்!
தினம் தினம் படித்தே தெருளுடன் உயர்வோம்! —(வ)

# சன்மார்க்கத் தந்தையைப் போற்றுவோம்!

இராகம்: **கேதாரகௌள** தாளம்: **ஆதி**

**பல்லவி**

சன்மார்க்கத் தந்தையைப் போற்றுவோம்—ஞான
சமரசப் பயிர்வளர்த்த இராமலிங்க வள்ளலாம் —(ச)

**அநுபல்லவி**

துன்மார்க்கம் யாவும் தொலைந்தேகச் செய்யும்
தூயநற் சங்கமாம் சற்சங்கம் நிறுவிய —(ச)

**சரணம்**

கண்மூடி வழக்கம் மண்மூடிப் போகவும்
கலையுரைத்த கற்பனை நிலைபெறு தேகவும்
பண்மேவும் தமிழ்மணம் பாரெங்கும் வீசவும்
பல்லுயிர்கள் வாழவும் நல்லுரை செய்திட்ட —(ச)

# வள்ளலவர் சீர் அறிவோம்!

இராகம் : சங்கராபரணம் தாளம் : ரூபகம்

### பல்லவி

வடலூரர்வளர் இராமலிங்க
வள்ளலவர் சீர்அறிவோம்! —(வ)

### அநுபல்லவி

திடமாகப் புவிமீதில்
தெளிந்துண்மை தேறிடுவோம்! —(வ)

### சரணங்கள்

அருட்பாவாம் தேனமிழ்தம்!
அகமோங்கும் தெள்ளமிழ்தம்!
இருள்மாயை நீக்கும்அருள்
இன்பத்தமிழ் அன்பமிழ்தம்!
உண்டிடுவோம்! உவப்புறுவோம்!
உத்தமராய் நிலவிடுவோம்!
கண்டிடுவோம் அருட்சோதி!
கருணையுடன் துலங்கிடுவோம்! —(வ)

சமரசமெய்ஞ் ஞானம்வரச்
சன்மார்க்கப் போதமுற
மமதையகம் மாய்ந்தொழிய
மதிவளரும் நிலை எய்த
அன்புப்பணி சிறந்தோங்க
அனைத்துயிரின் வாழ்வோங்க
துன்பஇருள் தொலைந்தேகத்
தூயவழி காட்டுவித்தார்! —(வ)

# இராமலிங்க குருவே!

இராகம் : சிம்மேந்திரமத்திமம் தாளம் : ஆதி

### பல்லவி

இராமலிங்க குருவே சரணம்
இன்பக் கருணைத் திருவே சரணம் —(இ)

### அநுபல்லவி

காமக் கருங்கடல் கடந்தமெய் நிலையே!
கற்பூர மணசுகம் கமழ்பெரும் கலையே! —(இ)

### சரணம்

சாந்தமே பொங்கிடும் சற்குண நிறையே!
சன்மார்க்க நெறி சாற்றிய இறையே!
காந்தமே அருட்பா மலர்ந்த வேந்தே!
கனிச்சுவை அமுதமே! காட்சிதந்தாள்வாய்! —(இ)

# இனி யார் பாடுவார்?

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

### பல்லவி

இனி யார் பாடுவார் இராமலிங்கம் போலவே
இருட்சாதி வேற்றுமைகள் எங்கெங்கும் தீரவே
—(இ)

### அநுபல்லவி

கனிபோலும் தமிழில் கருத்தும் இனித்திடவே
கருணை யருட்சோதிக் கடவுளை நினைத்திடவே—(இ)

### சரணம்

வன்மரணப் பாவி வந்திடுவான் என்றே
வளம்தரும் சன்மார்க்க வழிசார்வீர் என்றே
இன்ப அருள்வாழ்வில் எவ்வுயிரும் தழைக்க
இணையில்லா ஞான இயல்பினிலே செழிக்க —(இ)

# தமிழ் அமுதும் உண்டோ?

இராகம்: ஹேமவதி தாளம்: ரூபகம்

### பல்லவி

அருட்பாவைப்போல்–தமிழ்
அமுதும் உண்டோ மனமே? —(அ)

### அநுபல்லவி

மருள்படர் உணர்வும் மமதைப் பேயும்
மடிந்திடச் செய்யும் மாண்பினைப் பெய்யும் —(அ)

### சரணம்

அன்பு வள்ளல் இராமலிங்கம் வந்தார்!
அவனி உய்யவே அருட்பா தந்தார்!
இன்புறும் கல்லும் அவர்நூல் கண்டால்!
என்றும் இனிக்கும் அதனை உண்டால்! —(அ)

11

# அழகுறத் தந்தார்!

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

**பல்லவி**

அருள்மணக்கும் பாட்டை அழகுறத்தந்தார்—நம்
அண்ணல் இராமலிங்கம் அமிழ்தெனத் தமிழ்
பொழியும் —(அ)

**அநுபல்லவி**

பொருள்மணக்கும் ஞானப்புண்ணியம் வளர்ந்திடவே
புவனமெல்லாம் அன்பால் பொருந்தி மகிழ்ந்திடவே
—(அ)

**சரணம்**

சத்திய சன்மார்க்க சங்கத்தின் நாதம்
சார்ந்தெங்கும் தூய சமரசம் முழங்கிடவும்
நித்திய சுகத்தினிலே நிலைத்தே உயிரெல்லாம்
நீதமுடன் என்றும் பேதமின்றி வாழவும் —(அ)

12

## வள்ளல் கீதம் ஓதிடுவோம்!

1

இருள்நெறி அகன்றே எங்கெங்கும்
இன்பம் தழைத்தே மெய்ஞ்ஞான
அருள்நெறி பயின்றிவ் வுலகெல்லாம்
அன்பில் செழித்தே ஓங்கிடவும்
வாழ்வகை இசைத்த அண்ணலார்
வள்ளல் இராம லிங்கம்அவர்
தாழ்வறப் பாடிய அருட்பாவினைச்
சீருடன் கற்றே உய்ந்திடுவோம்!

2

சாதி சமயப் பூசல்களும்
சாரும் கொடிய வாதுகளும்
ஓதும் புகழ்சேர் பரிதிமுன்னே
ஒதுங்கிடும் பனிபோல் விலகிடவே
உயிர்கள் யாவும் அருளிறைவன்
உருவெனத் தெளிந்தே மாந்தரெலாம்
மயக்கம் தீர்ந்து வாழ்ந்திடவே
வள்ளல் கீதம் ஓதிடுவோம்!

# சுகிர்தம் அடைவீர்!

இராகம்: திலங் தாளம்: ஆதி

### பல்லவி

ஜோதியைப் பாடிய வள்ளலைப் பாடியே
சுகிர்தம் அடைவீர் உலகீர்!—அருட்பெருஞ்
—(ஜோ)

### அநுபல்லவி

ஆதியைப் பாடிய அறிவொளிர் மேதையை
அருள்வட லூர்ப்பதி அமர்ந்திடும் தாதையை
—(ஜோ)

### சரணம்

அமிழ்தநல் மழையென அருட்பா பொழிந்த
அன்பெனும் அண்ணலை அருங்குண மணியினை
தமிழ்ப்பெரும் நாட்டின் தவமாய் உதித்த
தருவினைக் கருணைத் திருவினை நாளும்—(ஜோ)

## உள்ளம் உருகச் செய்யும்!

(கிளிக்கண்ணி இசை)

1

உள்ளம் உருகச் செய்யும்
ஊனும் இனிக்கச் செய்யும்
கள்ளம் கருகச் செய்யும்—கிளியே
கனிதமிழ் அருட்பா காண்போம்!

2

இன்பத் தமிழில் நல்ல
இனிய அருட்பா தந்த
அன்பொளிர் இராமலிங்கம்—கிளியே
அவர்உரை மேவி வாழ்வோம்!

3

ஞான வடலூர் தன்னை
நாடி நாமும் சென்றே
ஆனந்தம் பொங்கிடவே—கிளியே
அருட்ஜோதி கண்டிடுவோம்!

4

மனத்திரை யகற்றி மிக்க
மாண்போங்கும் சன்மார்க்க
இனத்துடன் கூடிப் பாடிக்—கிளியே
என்றென்றும் மகிழ்ந்திடுவோம்!

## உன்னைத்தேடி அலைகின்றேன்!

இராகம் : சுபபந்துவராளி　　　　　　　　　　தாளம் : ரூபகம்

### பல்லவி

உன்னைத் தேடி அலைகின்றேன்
　　ஓ பரம்பொருளே! எங்கெங்கோ　　　　—(உ)

### அநுபல்லவி

என்னுள் நீயும் இருக்கின்றாய்
　　என்னும் உண்மை தெரியாமல்　　　　— உ)

### சரணம்

தன்னை யறியும் பேருணர்வே
　　தலைவா நின்னைத் தெளிவதாம்!
உன்னை மனமாம் கோயிலுள்ளே
　　உற்றே நோக்கிடத் தெரியாமல்　　　　—(உ)

# புனிதம் அடைவேனே?

இராகம்: சாரமதி　　　　தாளம்: ஆதி

## பல்லவி

பூங்குழல் ஏந்தியுன்றன் புகழ்இசை ஊதியுமே
புனிதம் அடைவேனே புண்ணியனே! ஞானப்—(பூ)

## அநுபல்லவி

திங்ககற்றும் தூய ஓங்கார நாதத்துடன்
சேர்ந்திடும் சுருதிலயம் சார்ந்திடும் போதத்துடன்
—(பூ)

## சரணம்

சஞ்சலம்நிறை வாழ்வில் சாந்திவளம் பொழிவாய்!
சத்துவ குணத்தோர்கள் நத்திடும் எழிலோனே!
வஞ்சகம் பொய்சூது வாதுகளுக் கிடமே
வையாமல் நெஞ்சம்மிக நையாமல் என்றென்றும்
—(பூ)

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1569
நன்கொடை எண்: 1569
காமராசர் பல்கலைக்கழகம் அவ்வை சண்முகம் நூலகம்.

இசைப் பாவலர் என். எஸ். சிதம்பரம்

அவர்களின்

# இதர நூல்கள்

1. **இசைக் கனிகள்**

(நூற்றொரு இன்தமிழ்க் கீர்த்தனங்கள் கொண்டது. யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் அணிந்துரை அடங்கியது.)

2. **பாடும் கீதம் கேட்குது!**

(காலத்திற்கேற்ற கருத்திற்கினிய இசை விருந்து. இருபத்தைந்து பாடல்களும், தமிழ் நாட்டின் பிரபல கவிஞர்களின் அணிந்துரைகளும் கொண்டது.)

3. **தமிழிசைப் பாடல்கள்!**

(நயம் மிக்க இருபத்தேழு பாடல்கள் சுர தாளக் குறிப்புக்களுடன் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியால் வெளியிடப் பெற்றது.)

4. **பாராமுகம் ஏன் ?**

(திருச்சி வானொலியில் ஒலி பரப்பப்பெற்ற ஒப்புயர்வற்ற இரு இசை நாடகங்களைக் கொண்டது.)

ஸ்ரீ ஷண்முகா பிரஸ், திருச்சி.